# பல்லும் சொல்லும்

ரொம்ப நாளா எனக்கு ஒரு சந்தேகம். “பல்லு போனால் சொல்லு போச்சு” என்பார்கள். பல் போனால் எப்படி சொல் போகும்? நாவுக்கும் சொல்லுக்கும் தானே உறவு! பல்லுக்கும் சொல்லுக்கும் ?...

மூன்று மாதங்களாக ஆட்டங்கண்டிருந்த என் மூன்று பற்களை எடுப்பதற்காக பல் மருத்துவமனைக்கு சென்றேன். பயங்கர கூட்டம். கடைசி வரிசையில் ஒரே ஒரு நாற்காலி - காலி, அதில் சென்றமர்ந்தேன். சுவற்றை ஆக்ரமித்த படங்களும், விளம்பரங்களும் கண்ணில் பட்டன. பல் பராமரிப்பு பற்றிய விவரங்கள், நீளமான வெள்ளை நிறக் கோட்டு, நீல நிற டையுடன் டாக்டர் சொல்லும் அறிவுரைகள், சிகிச்சைக்கு முன் - சிகிச்சைக்குப் பின் எடுக்கப்பட்ட வாய் திறந்த படங்களை வாய் மூடாமல் பார்த்துக்கொண்டிருந்தேன். அண்ணாந்து டிவியை பார்த்து, பார்த்து கழுத்து வலிக்க ஆரம்பித்தது. அசந்து போய், அலுத்துப் போய் கண் மூடி காத்திருந்தேன்.

“பல்லை உடைப்பேன்”, “பல்லை பேத்திடுவேன்”, “பல்லைத் தட்டி கையில் (யார் கையில்?) கொடுத்திடுவேன்”... என்றெல்லாம் கோபத்தில் கத்துவார்கள். பற்களை நோக்கி ஏன் இத்தனை கற்கள்? கொஞ்சமாக சிரித்தால் “பல்லிளிக்காதே’ - அதிகம் சிரித்தால் “பல்லைக் காட்டாதே” என்ற ஏவுகனைகள் வேறு. உடலில் எங்கு வலித்தாலும், பல்லைக் கடித்து சகித்துக் கொள்வோம். கோபம் வந்தால் பல்லைக் கடித்து அடக்கிக் கொள்வோம். எரிச்சல் வந்தால் பல்லைக் கடித்துப் பொருத்துக் கொள்வோம். நகத்தை பல்லால் கடித்துக்கடித்து துப்புவோரும் உண்டு - சிந்திக்கிறார்களாம்!

நாவைக் காக்க 32 பல் வீரர்கள். மிக்ஸியும், கிரைண்டரும் சேர்ந்த ஒரு பற்படையே வாய்க்குள். இத்தனை வீரர்களையும் மீறி, நாவு ஏதாவது சொல்லப் போய், வாங்கிக்கட்டிக் கொள்வதென்னவோ பற்கள்தான்! பாவம் ஒரு பக்கம், பழி ஒரு பக்கம்!!

பற்களில்தான் எத்தனை வகை! மழலையரின் பல், அரிசிப்பல்; அழகிய பல் - முத்துப்பல்; அழுகிய பல் - சொத்தைப் பல். பெண்களில் பல்லழகி உண்டு, ஆண்களில் - பல்லழகன் என்று கேள்விப்பட்டதுண்டா? தெற்றுப்பல் என்ற அதிர்ஷ்டப்பல். அறிவுப்பல் (விஸ்டம் டூத்) என்ற அறிவுக்கு அறவே தொடர்பில்லாத பல். சமீப காலமாக ஊதாப்பல் (ப்ளூ டூத்) என்ற தகவல் பறிமாற்ற தொழில் நுட்பம் வேறு. அதற்கு ஏன் அந்தப்பெயர்? அங்கே பல்லுக்கு என்ன வேலை? தெரியவில்லை.

ஓ... இரண்டு மணி நேரம் தள்ளியாகிவிட்டது. இன்னும் எவ்வளவு நேரம் ஆகுமோ என்று பெருமூச்சு விடுகையில், அப்பாடா ... உள்ளே அழைக்கப்பட்டேன். அறையிலிருந்த ஒரு தினுசான மெத்தைப் படுக்கையில் கவனமாக கால் நீட்டி படுத்தேன். வாயும் மூக்கும் மூடிய அடையாளம் தெரியாத டாக்டர் தன் வேலையை ஆரம்பித்ததும் மெத்தை படுக்கை முள் படுக்கையானது.

‘அ’ வுக்கு அடுத்த எழுத்தை டாக்டர் சொல்ல, நான் திரும்ப சொல்ல, டாக்டர் மீண்டும் சொல்ல, நான் மீண்டும் சொல்ல, டாக்டர் மீண்டும், நானும் மீண்டும், மீண்டும்... ஆ..ஆ..ஆ.... சொல்லிச் சொல்லி, என் வாய் கோட்டைவாயில் போல் திறக்க.... இம்சை தாளாமல் தவிக்கையில்.... “ஏன் டாக்டர், நீங்கள் வெளியே நின்று கொண்டுதானே பல்லை பிடுங்குவீர்கள்?” என்று அப்பாவித்தனமாக ஒருவர் கேட்டது நினைவுக்கு வந்து, தாடை வலியை சிறிது மறக்கடித்தது.

பண்டிகைக்கு முதல் நாள் வீட்டை ஒட்டடை அடித்து, மூலை முடுக்குகளையெல்லாம் துடைத்து, கறையெல்லாம் தேய்த்து, தண்ணீரை பீய்ச்சியடித்து சுத்தம் செய்வார்களல்லவா? அடுத்த அரைமணி நேரத்தில் என் வாய்க்குள் நடந்ததும் கிட்டத்தட்ட அதுதான். அப்போதுதான் என் கால்களும் கைகளும் நெளிந்து வளைந்து ஆடிய, எந்த தாளத்துக்கும் பொருந்தாத, நர்த்தனம் அரங்கேறியது.

ஐந்து நிமிட ஓய்வுக்குப்பின் கையில் சிரிஞ்சோடும், வாயில் பு(ண்)ன் சிரிப்போடும், என்னை மீண்டும் நெருங்கினார் டாக்டர். ‘வலிக்காது’ என்று சொல்லி சுருக், சுருக், சுருக் என்று சுருக்கமாக எகிரில் மூன்று இடத்தில் ஊசி போட்டார். அவருக்கு வலிக்காது என்று சொல்லியிருப்பார் போலிருக்கிறது. எனக்கு ? .... பொறுத்துகொள்வதைத் தவிர வேறு வழி? சிறிது நேரத்தில் மறத்துப்போன எகிரிலிருந்து புல்லைப்பிடுங்கவதைப் போல், என் மூன்று பல்லைப் பிடுங்கினார். பெருக்கெடுத்த இரத்த வெள்ளத்தை பஞ்சணை போட்டு படாதபாடு பட்டு தடுத்து நிறுத்தினார். வாய் நிறைந்த பஞ்சோடு வெளியே வந்த என்னைப் பார்த்து வாய் நிறைந்த சிரிப்போடு வரவேற்ற என் மனைவியைப் பார்க்க வேண்டுமே....

சவூதியிலிருந்து அலைபேசியில் என்னை நலம் விசாரித்த என் மகன், “Fill up the blanks எப்போ?”என்றதும் எனக்கு ஒரு கணம் புரியவில்லை. புதுப்பல் கட்டுவதைத்தான் தனக்கே உரிய பாணியில் கேட்டது பிறகு தெரிந்துகொண்டேன்.

அடுத்த மூன்று நாட்கள் வாய் முழுக்க வெந்துபோய், உண்ணவும் முடியாமல், குடிக்கவும் முடியாமல், மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் - நான் பட்ட அவஸ்தை தனிக்கதை. ஒரு வாரம் கழித்து (பொய்ப்) பல் கட்டும் படலம். ஒரு வழியாக இருபது நாட்கள் பல்செட்டை பகலில் மாட்டி, இரவில் கழற்றி - மாட்டி - கழற்றி - மாட்டி - கழற்றி - கழிந்தது.

பல் வலியால் அவதியுற்றோரைக் கேளுங்கள் - தம் எதிரிக்கும் இந்த வலி வரக்கூடாது என்பார்கள். பற்களிலிருந்து தலையின் எல்லா திசைகளிலும் மின்னலாய்ப் பாய்ந்த வலிஅம்புகளை சு(ச)கித்த அனுபவம்!

நினைவு தெரிந்த நாளிலிருந்து கேட்டுக் கேட்டு, பார்த்துப் பார்த்து அலுத்துப்போன ஒரு விளம்பரம் பற்பசைபற்றியதுதான். இருந்தாலும், தினமும் கண்விழித்ததும் அதற்குத்தானே பல்லைக்காட்ட வேண்டியிருக்கிறது! அதைவிடுங்கள், பற்பசை குப்பியில் ஒளிந்திருக்கும் ஒரு செய்தி தெரியுமா? பற்பசையை குப்பியிலிருந்து எடுப்பது மிகச்சுலபம் - திரும்ப அதனுள் போடமுடியுமா? அப்படித்தான் - நம் பேங்க் அக்கவுண்டிலிருந்து பணம் எடுப்பதும். எடுப்பது சுலபம் - ஆனால் போடுவது எவ்வளவு கஷ்டம் பாருங்கள்.

பல குச்சிகளின் சீரான தொகுப்புதானே சீப்பு ! அந்த சீப்பின் பற்கள் சீராக இருந்தால்தானே வாரிய தலைமுடியும் ஜோராக இருக்கும். தலைமுடியை வகுத்தும், பகுத்தும், தொகுத்தும் தருவது சீப்பின் சீரான பற்கள்தானே! சீர்கெட்ட சீப்பால் சீவினால் பேர்கெட்டுபோகுமல்லவா!

தூய்மையான பல்வரிசை ஒரு அழகிய ஆபரணம். அதனால்தான் “எவ்வளவு பொன்னகை அணிந்திருந்தாலும், புன்னகையும் சேர்த்து அணியாதவரை முழுமையாக உடுத்தியவர்களாக ஆகமாட்டீர்கள்” என்று பெரியோர் கூறுவர்.

மூன்றுபற்கள் இல்லாமல் சரியாக பேசமுடியவில்லை. குழறிக்குழறி பேசவேண்டியதாயிற்று. இதுவே முப்பது பல் போனால் என்னாகும்? “பல்லுபோனால் சொல்லு போச்சு” என்பது உண்மை. இதை உணர்வதற்கு நான் மூன்று பற்களை இழக்கவேண்டியதாயிற்று!!

முப்பது நாட்கள் கழித்து புதுப் பல்செட் கட்டி ஒரு வழியாக செட்டில் ஆகிவிட்டேன். எல்லாப் புகழும் இறைவனுக்கே !

“ஆ, ஆ, ஆ” - வில் ஆரம்பித்தது “ஈ, ஈ, ஈ” - யில் முடிந்ததுள்ளது. பல்கட்டியதும் சீராக இருக்கிறதா என்று அடிக்கடி கண்ணாடியில் பார்த்து கொண்டதைச் சொல்கிறேன்.

அடுத்தநாள் என் மகனும், மருமகளும் அலைபேசியில் அழைத்து பல்கட்டியதை விசாரித்தபின், என் ஒரு வயது பேத்திக்கு மூன்று பற்கள் முளைக்க ஆரம்பித்த செய்தியையும் சொல்லிவிட்டு, “பாப்பாவுக்கும் மூன்று புதுப்பல் - அப்பாவுக்கும் மூன்று புதுப்பல்” என்று, பல் முளைத்ததையும் பல் எடுத்ததையும் முடிச்சுப்போட்டு கலாய்த்தார்கள். இருக்கட்டும், இருக்கட்டும் - அவர்களுக்கும் இப்படி ஒரு காலம் வராமலா போய்விடும் !

“பல் போனால் சொல் போகும்” - சரி. பல் விழுந்தால் புதிதாகக் கட்டிக் கொள்ளலாம். சொல் விழுந்தால் .... அள்ளமுடியுமா?
கவனம் தேவை! கவனம் தேவை !! கவனம் தேவை !!!

Yours toothfully,

**Dr. M.M. Shahul Hameed** Ph. D.,
mmsjmc@yahoo.co.in